# காந்தீயம்

விலை 10 சதம்

**இராட்டை**

சுரண்டலையும் ஆதிக்கத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கு இராட்டை ஒன்று தான் சிறந்த சாதனம்

—காந்திஜீ

மலர் 13 | காந்தி நிலையம்- உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 106) 1975 ஒக்ரோபர் | இதழ் — 1


## மக்களுக்கு மகாத்மா தந்த ஆயுதம்

அக்ரோபர் 2 ஆம் திகதி புனித தினம். இராம நவமி கிருஷ்ண ஜயந்தியைப் போல, ஒரு அவதார புருஷர் பிறந்த நாள். பாரத தேசத்தின் விடுதலை மூலம் உலக மக்களின் விடுதலைக்காக ஒரு மகா புருஷர் அவதரித்த நாள். தாம் பிறந்த நாளை மகாத்மா சர்க்கா ஜயந்தி (கதர் பிறந்த தினம்) எனப் பெயரிட்டார். இத்தினம் ஆண்டு தோறும் கொண்டாடப் பட்டு வருகிறது. ஆனால் காந்தி மகானின் உபதேசத்தை அறிந்து அதைப் பின்பற்றுகிறோமா என்பதைச் சிந்தித்து, நமது மனச்சாட்சியைச் சோதனை செய்து கொள்ள இது ஒரு புண்ணிய தினம்.

அவதார புருஷர்கள் முன்னர் அழித்த அரக்கர்களின் ரூபம் வேறு. ஆனால் காந்தி அடிகள் போராடவேண்டியிருந்த அரக்கன் வேறு. இந்த அரக்கனின் வெளிப் போர்வை ஏகாதிபத்தியமாக இருந்தது. உண்மையில் அதன் சொரூபம் யந்திரம். ஏகாதிபத்திய வெளி ரூபத்தை மட்டுந்தான் காந்தி அழிக்கமுடிந்தது. அவர் உண்மையான அரக்கனின் ரூபத்தை நமக்கு எப்பொழுதும் ஞாபக மூட்டிவந்தார்; அவ்வரக்கனுடன் போராட நமக்கு வழி காட்டினார். ஆனால் எம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இயந்திர அரக்கன் சிறிதாக இருந்த போது மனிதனுக்கு அடங்கி, அவனுக்கு அடிமையாகிச் சேவை செய்தான். ஆனால், நாளடைவில் தன் கோர சொரூபத்தைக் காட்டத் தொடங்கி, மனித வர்க்கத்தையே இன்று அடிமைப்படுத்தி விட்டான்.



இந்த அரக்கன் யார்? கிராம மனிதனின் கைகளிலிருந்த வேலையைப் பிடுங்கி, அவர்களை நிர்க்கதியாக்கி விட்டான். நகர மனிதரின் பேராசையைத் தூண்டி விட்டான். கிராம மக்களின் மூலப் பொருளைப் பிடுங்கி, வேண்டாத பொருளை உற்பத்தி செய்து, ஆசை காட்டி கிராமத்து மக்களின் தலையிலே சுமத்தினான். அவர்களின் உற்பத்தி சக்தியைப் பிடுங்கிக் கொண்டு, தன்னுடைய அரசியல் செல்வாக்கை நிலை நாட்டினான். பணம் என்னும் பேயைக் கிராமங்களுக்கு அனுப்பி, செல்வத்தைச் சுரண்டினான். கிராம இரத்தத்தை அட்டை உறிஞ்சுவது போல் உறிஞ்சி வருகிறான். இந்த வாழ்க்கை முறைக்கு 'விஞ்ஞானம்' என்ற நாகரிகப் பெயரைக் கொடுத்தான். இதற்காக கல்வித் திட்டம். வியாபார முறை. நிர்வாக சாமர்த்தியம், கலை முதலிய எல்லாவற்றையும் ஏற்படுத்திக் கொண்டான். இன்று நம் தேசத்தின் கிராமத்தில் உள்ள 85 சத விகித மக்களைச் சுரண்டி வருகிறான்.

யந்திர நாகரிகத்துடன் போராட மகாத்மா தந்த ஆயுதம் இராட்டையே

மகாத்மாவின் வாழ்க்கையும், அவருடைய உபதேசமும் இராட்டையிலே தங்கியுள்ளது. அவர் இராட்டையைக் கண்டெடுத்த கதையே ஒரு அரிய வரலாறு.

இராட்டையைப் பார்க்காத போதே ஒவ்வொருவரும் நூற்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு 1908 ஆம் ஆண்டு லண்டனில் உதித்தது.

இந்தியா சுதந்திரத்தை இழந்தது தன் புராதன இராட்டையை இழந்ததால் தான் என்றும், அது மீண்டும் புத்துயிர் பெற்றால் தான் தேசம் சுதந்திரம் அடைய முடியுமென்றும் அவர் முடிவுக்கு வந்தார்.

அரசியல் சுதந்திரத்திற்குப் பிறகு சமூக, பொருளாதார சுதந்திரத்திற்கு இராட்டையைத் தவிர வேறு வழியில்லை என்பது காந்தி அடிகளின் கருத்தாகும்.

உணவுக்கு நிலமும், ஆடைக்கு இராட்டையும், ஏனைய ஜீவாதாரக் கைத்தொழில்களும் இலட்சக் கணக்கான கிராமமக்களுக்கு வாழ்க்கை உரிமைகளாகும். இவையெல்லாம் கிடைத்தால் தான் கிராம சுயராஜ்யம் ஏற்படுவது சாத்தியமாகும்.

நாம் அதே இராட்டையைக் கொண்டு யந்திர அரக்கனிடமிருந்து விடுபட்டுப் புதிய சமுதாயத்தை ஏற்படுத்த உறுதி கொள்வோமாக. பாவம்! கிராமத்தைச் சுரண்டும் யந்திர- நாகரிக- நகர வாழ்க்கை மோகத்தில் சிக்கிக் கொண்டு தவிக்கும் நம் சகோதரர்களை நம் ராட்டை மூலமே மீட்கவேண்டும். யந்திரத்திற்கு நாம் அடிமையாகாமல் யந்திரத்தை நமக்கு அடிமையாக்க முயலுவோமாக.

இந்தப் புனித தினத்தில், காந்திஜியின் உபதேசத்தையும் வழியையும் நன்கு ஆராய்ந்து அதன்படி நடக்க நமக்கு ஆண்டவன் அருள் புரியப் பிரார்த்திப்போமாக.

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 106
1975 ஒக்ரோபர்


## தவத்திற்கு உரு

சிவனைக் கண்டவர் யார்? சிவனின் பண்புகளை அறிந்தவர் யார்? தவத்தின் பண்புகளை அறிந்தவர் யார்? தவத்தைக் கண்டவர் யார்? சிவனைக் காண முடியாது. ஆனால் தவம் தான் இன்னதென்றறிய ஒரே ஒரு வழி உண்டு. அதற்கு ஓர் உரு உண்டு. அந்த உரு தான் மகாத்மா.

பெயர் சொல்லாமலே மகாத்மா என்றதும் மோகன்தாஸ் காந்தியின் நினைவு வரவில்லையா? எதனால்? தவமே அவர் உருவானதால் அல்லவா? தவத்திற்கோர் ஓர் உருவம் உண்டோ என்றொருவர் வந்தென்னைக் கேட்டால், தயங்காமல் நான் காந்தி பெயரைச் சொல்லி, அவர் உருவம் காட்டுவேன்.

எதற்காக என்றென்னை ஒருவர் கேட்கலாம்? தவமே தவம் செய்து அவர் உருவானதென்றால் அதில் வியப்பிற்கு ஓரிடமுமில்லை.

உடல் பொலிவும் உள உயர்வும் அவரைத் தவ வடிவாக்கின. தமக்கு வந்த நோவைத் தாங்கும் உடல்; பிறர்க்கு வரும் துன்பங்கண்டு வெம்பும் உள்ளம்; இது தவத்தின் உரு. '' உற்றநோய் நோன்றல்; உயிர்க்குறுகண் செய்யாமை: இவை தவத்தின் உரு. '' (குறள்)

அளவறிந்து, பிற உயிர் வருத்தாது உண்டுவளர்ந்த உடல்; என்புதுலங்கும் நெஞ்சம்; அன்பு தளரா உள்ளம்; இவை தவத்தின் உரு. அந்த என்பும் நெஞ்சமும் பிறர்க்குரிய தவ உருவம்.

ஆயிரம் ஆயிரம் ஏழைகள் அல்லற்படுவது கண்டு உயிர் ஓம்பத்துடிக்கும் உள்ளம். அதைத்துடைக்க இயன்ற அளவில் பணிசெய்து கிடக்கும் அளவிற்கு ஊண் எடுக்கும் உடல்; இவை சேர்ந்தது தான் தவ உருவம்.

தன் இனம், தன் மதம், தன் நாடு எல்லாம் மனித குலம் வாழ வழி வகுக்கும். வகையில் வளர வேண்டும் என்கின்ற உள்ளம் தவ உள்ளம் அல்லவா? மற்றவர் மதத்தையும் காக்கும் வழியில் மறைந்த உருவம் தவ உருவமல்லவா?

நீர், நிலம், தீ, காற்று இவற்றைக் குழாயிலிட்டுப் பரிசோதனை செய்யாது, புலனடக்கம், சத்தியம், அயரா உழைப்பு இவற்றைப் பொது வாழ்வுப்புடத்திலிட்டுப் பரிசோதித்தது தவத்தின் உருவல்லவா?

தான் செய்த சிறு தவற்றையும் பெரும் பிழையென்று கொண்டு பச்சாத் தாபப்படும் மெய்ஞ்ஞான வாழ்வு தவத்தின் உருவல்லவா?

ஆண்மை இழவாத காலத்தும் இல்லறத்தில் துறவறம் காத்தது தவத்தின் உருவல்லவா?

பொருளியலில், சமூகவியலில், அரசியலில் எச்செயலிலும் சத்தியமே மெய்ப்பொருள் என்று சாதித்து நின்றது தவத்தின் உருவல்லவா?

பல கொள்கைகள், பல அரசியற் கோட்பாடுகள் பல வேடங்கள் கொண்டு போராடும் வேளையில் எல்லாம் ஒருங்கிணையும் ஓர் உலகநெறி வகுத்தது தவ உருவமல்லவா?

இன்றைய அரசியலை ஆயிரம் ஆண்டு கழிந்து வரும் ஓர் அரசியல் நெறிக்கும் இணையும் வகையில் அமைத்துச் சர்வோதயம் தந்தது தவத்தின் உருவமல்லவா?

பாலை வனத்து வரண்ட மரம் போல் கிடந்த பாரத நாட்டவரை தலை நிமிர்ந்த மனிதராக்கியது தவ உருவமல்லவா?

தாழ்வடைந்து தேய்ந்திருந்த இந்தியரைத் தூசினின்றும் தூக்கி ஆள் குலத்தார் ஆக்கிவிட்டது தவத்தின் உருவல்லவா?

சொல்லும் நினைவும் ஒன்றாகிச் செயலில் அவை பலனாகப் பொருத்தியது தவ உருவம் அல்லவா?

பலனை எல்லோரும் பகிர்ந்து உண்ணுமாறு பற்றுடனே பணி செய்தும், பணிந்தொழுகும் பண்புடையான் தவத்திலும் சிறந்த உருவமல்லவா?

சேர்ந்தாரையும் சிறப்பித்துச் சேராதாரையும் செழிப்புப் பெற செய்கின்ற பணியாளன் தவ உருவமல்லவா?

தான் தனியனாய் நின்று கணமெல்லாம் சிந்தனை, வாக்கு எல்லாம் சேர்த்துப் பணி செய்து ஒன்றும் இல்லாப் பலரெல்லாம் யாதாயினும் உடையராகச் செய்த ஒருவர் தவத்தின் உருவல்லவா?

அந்தத் தவ உருவை வந்தனை செய்து வாழ்த்தி ஏற்றி வழி நிற்றல் எம் கடனல்லவா?

—இ·இ

## சர்வோதய பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரத்தில் நாள் தோறும் பிடி அரிசி இட்டு, இதனை மாதந்தோறும் சர்வோதய இயக்கத்துக்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைச் சென்ற இதழ்களில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

### இரத்மலானை

திருமதி. ஆ.ம. பொன்ராசா
திருமதி.ம. சுப்பிரமணியம்
,, வி. செல்லையா
,, ப. இராசசர்மா
,, ச. கணநாதன்
திரு. எஸ். ஞானசேகரம்
திருமதி. சிவபோதநாதன்
திரு. எி. வி. ஐ. சாஸ்தா
,, வே. சிவகுரு
,, சா. அ. யேசுதாசன்
,, எஸ். இரங்கநாதன்
,, ஜி. பொன்னம்பலம்
,, ஏ. நாராயணன்
இராஜேஸ்வரி ஸ்டோர்ஸ்
நெப்யூன்பாமசி

### வெள்ளவத்தை

42 ஆவது ஒழுங்கை

திருமதி. ப. நடராஜா
,, எஸ். தில்லைநடராஜா
,, உ. பாலேந்திரன்
,, க. சண்முகநாதன்
,, ரீ. குணநாயகம்
,, உ. கதிர்காமநாதன்
,, இ. இராஜராம்
,, எஸ். ஜே. இரத்தினசிங்கம்
,, வே. முருகேசு
,, எஸ். இராசரத்தினம்
ஈ. ஏ. கூரேமாவத்தை

திருமதி. சி. சிவராஜா
,, அ. செல்வச்சந்திரன்
,, ப. கணேசநாதன்
,, க. கனகசபாபதி
,, ச. நவரத்தினராஜா
,, த. செல்வராசா
,, ஆர். குமாரதாசன்

## வருந்துகிறோம்

இரத்மலானை - சர்வோதயப் பாத்திர அன்பர் திரு- ஆ. ம. பொன்ராசா 06· 09. 1975 இல் அகால மரணமடைந்தார்- அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

# பெண்கள் புரட்சி செய்ய வேண்டும்

பெண் என்பவள் பிரம்மதேவன் எழுதிய ஒரு கவிதையாவாள். அவளிடம் பல ஆற்றல்கள் உறங்கிக் கிடக்கின்றன. அவற்றை விழிப்புறச் செய்து சமுதாய மாற்றப் பணியில் நாம் பயன்படுத்தத் தவறிவிட்டோம். ஏதோ சில இடங்களில் பெண்கள் விழிப்புற்றார்கள் எனினும் அவர்களும் ஆண்களைப் போன்று நடந்து கொள்ளவே முயன்றிருக்கிறார்கள். வீரத்தில் பொருளாதாரத்துறையில் ஆண்களோடு போட்டியிட பல்வேறு முயற்சிகளை பெண்கள் மேற்கொண்டார்கள். ஆனால் பெண்கள் தங்கள் பெண்மைக்குரிய சிறப்புடன் வேறு துறைகளில் பிரவேசித்த உதாரணங்களை நான் கண்டதில்லை.

'' நான் தவறான வழியில் நடக்கிறேன். அநீதி இழைக்கிறேன். தவறான வழியில் பணம் சேர்க்கிறேன்; ஆனால் அதற்குக் காரணம் எனது மனைவியும், தாயாரும் தான். ஏனெனில் அவர்களுக்கு முகப்பவுடரும், கிரீமும், நகைகளும் தேவைப்படுகின்றன'' என்று ஆண்கள் கூறுகிறார்கள். எனவே எனது சகோதரிகளிடம் நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்; தங்களது சகோதரர்களிடமும், தகப்பனார்களிடமும் தயவு செய்து பாபமான வழிகளின் மூலம் வரும் பாபப் பணம் எங்களுக்கு வேண்டாம் என்று உறுதியுடன் கூறிவிட வேண்டும். நகைகள் அணியமுடியவில்லை என்றாலோ, சினிமாப் பார்க்காவிட்டாலோ அதைப்பற்றிவட்சியம் செய்யவேண்டியதில்லை. அவர்கள் உண்ணும் உணவு சத்தியம், நேர்மையின் பெயரால் கிடைக்கும் உணவாக இருக்கும். இது போன்ற முடிவை பெண்கள் செய்வார்களானால் பெண், சகோதரி, மனைவி, தாயார் என்ற முறையில் வீட்டிற்குள்ளேயே பெரும் புரட்சியை செய்து விட முடியும். மேலும் சமுதாயத்தில் நடந்து வரும் பொருளாதார சுரண்டலை ஓரளவுக்குக் குறைப்பதில் தங்கள் பங்கை பெண்கள் ஆற்ற முடியும். பெண்களிடையேயிருந்து சிறந்த பிரஜை உருவாக வேண்டுமென்ற என் விருப்பத்தை உங்களிடம் வெளியிட விரும்புகிறேன். தாயாராவதன் மூலம் நற் பிரஜையை நாட்டிற்கு அவர்கள் பெற்றுத்தர வேண்டுமென்ற பொருளில் பெண் சிறந்த பிரஜையாக உருவாக வேண்டுமென்று கூறவில்லை. பெண் தன்னைத்தானே சிறந்த பிரஜையாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் இந்நாட்டிலிருந்து ஊழல்களும், அநீதிகளும் தூரவிலகும்.

இந்நாட்டில் துர்க்கையின் சிறப்பு பற்றி அதிகம் புகழப்படுகிறது. இந்நாட்டில் பெண் 'அபலை' இல்லை என்பது தானே பொருளாகிறது. ஆனால் இன்று பெண் தன்னை பலவீனமானவள் என்று கருதுவதில் தான் தனக்கு கௌரவமிருப்பதாக நினைக்கிறாள். ஆனால் ஆண்களின் உடலிலுள்ள அதே ஆற்றல் பெண்களுக்குமிருக்கிறது என்று உங்களிடம் கூற விரும்புகிறேன். இந்த ஆற்றலை தட்டி எழுப்புங்கள். உங்களுக்கு ஆன்ம தரிசனம் ஏற்படும் போது தான் இந்த உடலை எவ்வளவு அலங்கரிக்க முடியும். எவ்வளவு கவர்ச்சியாக வைத்துக்கொள்ள முடியுமென்பதில் நாட்டம் செல்லாது; அதில் தான் உங்கள் கௌரவமிருப்பதாக நீங்கள் கருதமாட்டீர்கள். இன்று வரை பெண்களை உடலை வளர்ப்பவர்களாகவும், அலங்காரப் பொருளாகவும் ஆக்கிவிட்டார்கள். உடல் அழகிலும், செயற்கை வனப்பிலும் தான் தங்கள் கௌரவம் பொதிந்திருக்கிறதென்று கருதப்பட்டு வந்திருக்கிறது. அச்சம், மடம், நாணம் பெண்களின் சிறப்பியல்புகளாக கருதப்பட்டு வந்திருக்கிறது. ஆன்மிகத்திற்காக மட்டுமின்றி சுதந்தர மனிதனாக வாழ விரும்புபவர்களும் இம் மூன்றையும் தியாகம் செய்துவிட வேண்டுமென்று கூறவிரும்புகிறேன்.

இப்பொழுதெல்லாம் பெரிய நகரங்களில் பெண்கள் கடத்திச் செல்லப்படும் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன இது ஒரு பெரிய பிரச்சனையாக உருவாகி வருகிறது. தனது உடலின் மீது அதிகப் பற்று இல்லாத எந்தப் பெண்ணையும் தவறான நோக்கோடு யாரும்காண முயலமாட்டார் என்பதை என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து நான் கூறவிரும்புகிறேன். எந்த அளவுக்கு தனது உடலின் மீது ஆசையும் விருப்பமும் பெண்ணின் மனதில் ஏற்படுகிறதோ அது தான் ஆண்களுடைய மனதில் விருப்பமாக கிளர்ந்தெழுகிறது. பெண்களை யாராவது கண்ணெடுத்துப் பார்க்கிறார் எனில் அதற்குப் பொறுப்பானவர்கள் பெண்களே தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பெண்களின் கண்கள் தூய்மையானதாக இருக்குமாயின் பெண்களுக்கு அதுவே தூய்மை புனிதத் தன்மை ஆகியவற்றிற்கு கவசமாக அமைந்து விடுகிறதென்பதை எனது சொந்த அனுபவத்தின் அடிப்படை மீது கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே பெண் தனது முழுச்சிறப்புடனும், கௌரவத்துடனும் எழுந்து நிற்கவேண்டும். தனிப்பட்ட நிலையிலும், சமுதாய நிலையிலும், பெண்கள் செல்வாக்கு பெறவேண்டும். வாழ்க்கையில் மதம், ஆன்மிகத்திற்குரிய அடிப்படை எவ்வாறு அமைக்கப்பட முடியுமென்பது பற்றி பெண் தான் வழி காட்ட வேண்டும். பெண் தன் முழுசக்தியுடன் விழித்தெழுந்து புதிய மனிதனை உருவாக்குவது இன்றைய அவசிய தேவையாகும்.

—குமாரி விமலா டக்கார்

## காந்தி ஜயந்தி விழா பேச்சுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்

மகாத்மா காந்தி அடிகளின் 106 ஆவது பிறந்த தின விழாவை முன்னிட்டு, அகில இலங்கைக் காந்தி சேவா சங்க - கொழும்புக் கிளை ஆதரவில் 26. 09. 75 இல் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்.

### கீழ்ப்பிரிவு

முதலாம் பரிசு
செல்வன் - சிவநாயகம் - சிவேந்திரன்
இந்துக் கனிஷ்ட பாடசாலை
பம்பலப்பிட்டி

இரண்டாவது பரிசு
செல்வி - குமுதினி – இராஜரட்ணம்
திருக்குடும்ப கன்னியர் மடம்
பம்பலப்பிட்டி

மூன்றாம் பரிசு
செல்வன் - ஜோ. எ. புவனேஸ்வரன்
கொழும்பு - இந்துக் கல்லூரி
இரத்மலானை

### மேற்பிரிவு

முதலாம் பரிசு
செல்வி - அமுதா – சொர்ணலிங்கம்
செல்வி – மஞ்சுளா – கார்த்திகேசு
திருக்குடும்ப கன்னியர் மடம்
பம்பலப்பிட்டி

இரண்டாவது பரிசு
செல்வன் - க. கண்ணதாசன்
கொழும்பு - இந்துக் கல்லூரி
இரத்மலானை

இவர்களுக்கு, 2. 10. 75 இல் வெள்ளவத்தை-இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறும் காந்தி ஜயந்தி விழாவில் பரிசு வழங்கப்படும்.

வவுனியாவில்

# சர்வோதய ஊழியர்கள் கூடினர்

## இரண்டாவது சந்திப்பும் கருத்தரங்கும்

வவுனியா நகரசபை மண்டபத்தில் 14.09.75 இல் நடைபெற்ற சர்வோதய ஊழியர்களின் இரண்டாவது சந்திப்பும் கருத்தரங்கும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதலாவது சந்திப்பின் போது எடுத்த தீர்மானத்திற்கமைய நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சிக்கு வவுனியா மாவட்ட மக்கள் பேராதரவளித்தமை பாராட்டுக்குரியது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பிரதி நிதிகள் பங்கு பற்றினர்.

நிகழ்ச்சி மௌனப் பிரார்த்தனையோடு ஆரம்பமாகியது. வவுனியா மாவட்ட அதிபர் திரு. செ. சிவஞானம் அவர்கள் திருவிளக்கேற்றி வைத்து, ''சமயதர்ம அடிப்படையில் காந்தி அடிகள் வாழ்ந்தவர். இவரை நாம் பின்பற்றி வாழ்ந்தால் சகல பிரச்சனைகளும் தீரும்'' என இரத்தினச் சுருக்கமாகக் கூறினார்.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

திரு. த. நல்லதம்பி, காந்தீய நெறிப்படி அடக்கமான பண்புடன் அனைவரையும் வரவேற்றார். திருவாளர்கள். சோ. இராசசுந்தரம் - வவுனியா, இ. சண்முகராசா - திருக்கோணமலை, முதலியார். செ. சின்னத்தம்பி - வட்டுக்கோட்டை, வே. நாகராசா - மட்டக்களப்பு, கு. அருளம்பலம் - பொன்னுவெளி, சு. தில்லைநாதன் - வந்தாறுமூலை, கலாநிதி - கோபாலபிள்ளை மகாதேவா - கொழும்பு, த. குமாரசாமி - தெகிவளை ஆகியோர் வாழ்த்துச்செய்திகள் அனுப்பி ஆதரவைத் தெரிவித்தனர்.

வவுனியா, தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு, எக்ஸ். எம். செல்லத்தம்பு அவர்கள் காந்தீய தத்துவம் பற்றி அழகாக ஆழ்ந்த ஆராய்வுடன் எடுத்துக் கூறினார்.

அடுத்ததாக ஊழியர்கள் தம்மை அறிமுகஞ் செய்து கொண்டு தமது நிர்மாணப் பணிகளை எடுத்துக் கூறும் நிகழ்ச்சி இடம் பெற்றது. இந் நிகழ்ச்சியில், திருவாளர்கள் சி. கனகநாயகம் - விநாயகபுரம், தியாகி - கோ. இராஜகோபால் - திருக்கோணமலை, சி. கந்தசாமி - உடையார்கட்டு, சி. க. வேலாயுதபிள்ளை - கிளிநொச்சி, க. நடனசபாபதி - புலோலி, கு. இராமானந்தன் - இணுவில், டக்டர். க. சிவஞானரத்தினம் - உரும்பராய், ஆ. ம. செல்லத்துரை - வதிரி, ச. சுப்பிரமணியம் - வவுனியா, சோ. க. தம்பிப்பிள்ளை - கொழும்பு, மு. பொன்னம்பலம் - புங்குடுதீவு ஆகியோர் கலந்து கொண்டனர்.

'சர்வோதய தத்துவமும் அதனை இந்நாட்டில் பரப்பும் வழி முறைகளும்' என்னும் விடயம் பற்றிய கருத்துப் பரிமாறலை பேரறிஞர் திரு. கு. நேசையா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

ஒரு மணியளவில் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. ஊழியர்கள் அனைவருக்கும் மண்டபத்திலேயே மதிய உணவு அளிக்கப்பட்டமையால், பிற்பகல் நிகழ்ச்சிகள் தொடங்கும் வரையும் யாவரும் ஒருவரோடொருவர் கலந்துரையாடி - அளவளாவி - உறவைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

பிற்பகல் நடைபெற்ற கருத்துப் பரிமாறலில், திருவாளர்கள்: டக்டர். க. சிவஞானரத்தினம் - உரும்பராய், செ. சிவஞானம் - வவுனியா மாவட்ட அதிபர், க. நடனசபாபதி - புலோலி, வி. க. தங்கவேல் - கொத்தியவத்தை, கு. இராமானந்தன் - இணுவில், மு. பொன்னம்பலம் - புங்குடுதீவு, பெ. பொ. சிவசேகரம் - திருக்கோணமலை, ஆ. ம. செல்லத்துரை - வதிரி, ச. அ. டேவிட் - நெடுங்கேணி, ஆகியோர் பங்குபற்றி சர்வோதய தத்துவத்தைப் பரப்பும் வழி முறைகள் பற்றிச் சிறந்த கருத்துக்களை வெளியிட்டனர்.

இதன் பின், அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின், வவுனியா கிளை அமைக்கப்பெற்றது.

அடுத்த, சர்வோதய ஊழியர் சந்திப்பையும் கருத்தரங்கையும் திருக்கோணமலையில் நடத்த வேண்டுமென, தியாகி. கோ. இராஜகோபால் அவர்கள் கோரியதை, பலத்த கரகோஷத்துடன் சபை வரவேற்றது.

திரு சோ. ச. தம்பிப்பிள்ளை நன்றியுரை கூறிய பின் நிகழ்ச்சிகள் 4 மணியளவில் இனிது நிறைவெய்தின.

### காந்தி ஜயந்தி விழா

மகாத்மா காந்தி அடிகளின் 106 ஆவது பிறந்த தின விழா கொழும்பு - வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்திலும்.

உருத்திரபுரம் - காந்தி நிலையத்திலும்,

களுதாவளை - காந்தி சேவா இளைஞர் மன்ற ஆதரவில் மண்முனை தென் எருவில் கிராம சபை நூல் நிலையத்திலும்,

கிழக்கிலங்கை இளைஞர் மன்ற ஆதரவில் மட்டக்களப்பிலும் சிறப்பாக நடைபெறும்

### சர்வோதய ஊழியர்களுக்கு விநோபாஜியின் செய்தி

சர்வசேவா பிரசுரப் பகுதி நிர்வாகி திரு. கிருஷ்ணராஜ்மேத்தா அண்மையில் விநோபாஜியைச் சந்தித்த போது சர்வோதய ஊழியர்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன என்று கேட்டார்.

விநோபாஜி மௌன விரதம் ஓராண்டு காலத்துற்கு மேற் கொண்டிருப்பதால் அவர் கீழ்க் கண்ட பதிலை எழுதிக் கொடுத்தார்.

**அமைதி, சிவம், அத்வைதம்**

1. ஆன்மிக நூல்கள் உலக அளவில் பிரசாரம் செய்யப் படவேண்டும்
2. பூதானப் பணியை நிறைவு செய்வது'
3. மது—புலாலிலிருந்து விடுதலை.

ஆதாரம்: கிராமராஜ்யம்

### அகில இலங்கைக் காந்திசேவா சங்கம் வவுனியா கிளை

14. 9. 75 இல் வவுனியா —நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கைக்காந்தி சேவா சங்கத்தின் வவுனியா-கிளை அமைக்கப்பட்டது.

தலைவர்: திரு.ச.அ. டேவிட்
செயலாளர்:
திரு.அ. இராதாகிருஷ்ணன்
பொருளாளர்: திரு. ச.அருளானந்தம்

நிர்வாக சபை உறுப்பினர்
திரு.த.சுப்பிரமணியம்
திரு.சோ. இராசசுந்தரம்
திரு. த. நல்லதம்பி
திரு.த. நல்லையா
திருமதி.மகேஸ்வரி - கல்வளைசேயோன்
., டாக்டர் - சாந்தி - இராசசுந்தரம்

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
Registered at the G. P. O. as a Newspaper in Ceylon